**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044– 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப., (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 106/மா/2021**

**நாள் : 21.3.2022**

திருமதி P. உஷா பாய்,
கோயம்புத்தூர் - 641 011. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் – எதிர்மனுதாரர்

கோயம்புத்தூர் மாவட்டம், சாய்பாபா காலனி, பாரதி பார்க் ரோடு, 6வது கிராஸ், எண்.8A எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி. P. உஷா பாய் அவர்களின் 20.09.2021 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, 106/மா/2021 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**<u>ஆணை</u>**

கோயம்புத்தூர் மாவட்டம், சாய்பாபா காலனி, பாரதி பார்க் ரோடு, 6வது கிராஸ், எண்.8A எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி. P. உஷா பாய் தன்னுடைய 20.9.2021 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

“ நான் மேற்படி விலாசத்தில் குடியிருக்கும் வீட்டின் சொத்து வரி விதிப்பு எண்.22101733ன் கமர்ஷியல் வரி விதிப்பிலிருந்து டொமஸ்டிக் வரி விதிப்புக்கு மாற்ற

26.2.2020 அன்று விண்ணப்பித்து இருந்தேன். அதன்படி மாற்றிய வரி விதிப்பு தவறுதலாக இரு மடங்காக வரி விதிப்பு செய்துவிட்டனர். இத்தவறை திரு. ஜெயச்சந்திரன் R.I. மேற்கு மண்டல அலுவலகம், கோயம்புத்தூர் அவர்களிடம் கூறினேன். அவர் சைட் பார்வை செய்துவிட்டு தவறுதலான வரி விதிப்பை ஒப்புக்கொண்டு, இதை சரி செய்ய முதலில் அதிக வரிவிதிப்பை ரத்து செய்து புதிதாக வரிவிதிக்க வேண்டும் என்றார். பிறகு திரு. ஜெயச்சந்திரன் பணி ஓய்வு பெற்று பில் கலெக்டர் திரு. சரவணனிடம் ஒப்படைத்தனர். பிறகு திரு. சரவணனை நேரில் சந்தித்து கேட்டு வந்தோம். ஒருமுறை உதவி ஆணையர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் அவர்களை நேரில் சந்தித்து விண்ணப்பித்தேன். தேதி 16.12.2020. இன்று வரை எந்த முன்னேற்றமும் இல்லை. எனது கணவர் அதிக முறை வரிவிதிப்பு அலுவலகம் சென்று முயற்சி செய்தார். பின் உடல் நலக்குறைவால் இறைவனடி சேர்ந்துவிட்டார். இப்பொழுது நான் 81 வயதில் உடல் நலக்குறையோடு வரிவிதிப்பு அலுவலகம் சென்று முயன்று வருகிறேன். எனது ஒரே மகன் லண்டனில் இருக்கிறார். என்னால் அடிக்கடி வரிவிதிப்பு அலுவலகம் சென்று வர இயலவில்லை. ஆகையால் தயவு செய்து வரிவிதிப்பை முறைபடுத்தி கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்." என்று தெரிவித்துள்ளார்.

2) மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 3.11.2021 நாளிட்ட கடிதம் மூலம் உதவி ஆணையர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களிடம் கோரப்பட்டது.

3) முறையீட்டு மனுதாரர் மற்றும் உதவி ஆணையர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி ஆகியோரை 14.3.2022 அன்று விசாரணைக்கு ஆஜராகுமாறு 1.3.2022 நாளிட்ட அழைப்பாணை அனுப்பப்பட்டது. மனுதாரர் தனது வயோதிகத்தை முன்னிட்டு நீண்ட நேரம் பயணம செய்ய இயலாது என தொலைபேசியில் தெரிவித்தும், மேலும் கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையருக்கு அனுப்பியுள்ள தனது நாளிடப்படாத கடிதத்தில் கோயம்புத்தூர் மாநகராட்சி, வார்டு எண்.22 பாரதி பார்க், கிராஸ் 6–ல் உள்ள எனது வீட்டிற்கு சொத்து வரி திருத்தியமைக்கப்பட்டுவிட்டது என்றும், சொத்து வரி புத்தகத்தை தான் பெற்றுக்கொண்டதாகவும் தெரிவித்துள்ளார்.

4) கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையர், மேற்கு மண்டலம் தனது 10.03.2022 நாளிட்ட அறிக்கையில் பின்வரும் விவரங்களை தெரிவித்துள்ளார்.

"சம்பந்தப்பட்ட சொத்துவரி ஆய்வு செய்யப்பட்டது. 2021-2022-ஆம் வருடத்திய வார்டு எண்.22, மாதாந்திர பட்டியல் பக்கம் எண்.60/2021-2022ன் படி, வரிவிதிப்பு திருத்தம் செய்யப்பட்டு கேட்பு புத்தகம் வழங்கப்பட்டது. புத்தகத்தினை வரிதாரர் பெற்றுக்கொண்டமைக்கான கடித நகல் தங்களின் மேலான பார்வைக்கு இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது." என்று தெரிவித்துள்ளார்.

5) முறையீட்டு மனுதாரரின் புகார் மனு, மனுதாரர், உதவி ஆணையர், மேற்கு மண்டலம், கோயம்புத்தூர் மாநகராட்சி அவர்களுக்கு அனுப்பிய கடிதம், கோயம்புத்தூர் மாநகராட்சி உதவி ஆணையர், மேற்கு மண்டலம் அவர்களின் 10.3.2022 நாளிட்ட அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் கீழ்கண்ட விவரங்கள் கண்டறியப்பட்டன:

- மனுதாரர் திருமதி P. உஷாபாய் அவர்கள் 26.2.2020 அன்று சொத்துவரி விதிப்பு எண்.22101733 தொடர்பாக கோயம்புத்தூர் மாநகராட்சிக்கு மனு செய்துள்ளார் ஆனால் அதற்கான எந்தவித தீர்வும் கிடைக்காமல் இம்முறைமன்ற நடுவத்திற்கு 20.9.2021 அன்று தனது புகார் மனுவினை அனுப்பியுள்ளார்.

- மனுதாரர் வரி திருத்தம் தொடர்பாக பலமுறை மாநகராட்சி அலுவலர்களிடம் தீர்வு வேண்டி கோரிக்கை வைத்தும் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் வரிவிதிப்பு திருத்தம் தொடர்பாக எந்த நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்களால் எடுக்கப்படவில்லை.

- மனுதாரர் திருமதி. P. உஷாபாய் அவர்களின் கோரிக்கையான வரிவிதிப்பு திருத்தம், தற்பொழுது மாநகராட்சி அலுவலர்களால் செய்யப்பட்டு, கேட்பு புத்தகமும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அந்த புத்தகத்தினை வரிதாரர் பெற்றுக்கொண்டமைக்கான கடிதத்தினை கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டல உதவி ஆணையருக்கு அனுப்பியுள்ளார்.

இருப்பினும் மனுதாரர் வரிதிருத்தம் தொடர்பாக பலமுறை மாநகராட்சி அலுவலர்களிடம் தீர்வு வேண்டி கோரிக்கை வைத்தும் ஏறத்தாழ இரண்டு வருடங்கள் வரிவிதிப்பு திருத்தம் தொடர்பான எந்த நடவடிக்கையும் மாநகராட்சி அலுவலர்களால் எடுக்கப்படவில்லை. இது மாநகராட்சி அலுவலர்களின் அலட்சிய போக்கையே காட்டுகிறது. எனவே சுமார் 2 ஆண்டுகள் நடவடிக்கை எடுக்காமலிருந்த சம்மந்தப்பட்ட அலுவலர்கள் மீது துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கை எடுக்க கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையருக்கு பரிந்துரைத்து இந்த முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

A senior citizen seeking change of categorization from commercial to domestic classification from 2/2020 has been tossed up and down for 2 years till 10.03.2022 by the Assistant Commissioner office, Coimbatore West Zone and a complaint is lodged with this forum. This simple exercise was put on hold for 2 years by the Corporation authorities of the West Zone of the Coimbatore Corporation in an autocratic and indifferent manner. The Commissioner, Coimbatore Corporation is directed to initiate strict disciplinary action against the field officials involved in the delay and the Assistant Commissioner of the Zone for their sheer laxity, apathy, insensitive attitude towards a senior citizen's plea and inefficiency. Such elements of the Corporation workforce bring a bad name to the Local administration of the State Government and the Coimbatore

Corporation's image. The DMA is advised to issue directions to the Coimbatore Corporation Commissioner to set such aberrations under check.

2022-ஆம் ஆண்டு, மார்ச் திங்கள், 21-ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திருமதி P. உஷா பாய்,
எண்.8A, 6வது கிராஸ்,
பாரதி பார்க் ரோடு,
சாய்பாபா காலணி,
கோயம்புத்தூர் - 641 011.
2. ஆணையர்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர்.
3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.
4. உதவி ஆணையர்,
மேற்கு மண்டலம்,
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் - 641 002.
5. இணை இயக்குநர்,
ஒருகிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இ.கோ. / உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

21/3/22

செயலாளர்